27.01.2026

D.V.C: 12/2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026

ம.சா.1–ரம்யா , வயது. 24/2026, க/பெ. மனோகர்

## எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் வெள்ளாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறார். இருவரும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால், திருமணத்திற்கு முன்பே, எங்களுக்குத் தெரியும். கொரோனா காலத்தில் எனது கணவரின் தந்தை இறந்துவிட்டார். திருமணத்திற்கு முன்பும், பின்பும் எனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் சரி. அவரது தந்தை இறந்ததற்கு வந்தபோது, கொரோனா காலம் என்பதால், அவர் வெளிநாடு செல்ல முடியாமல் இருந்தது என்றும், அப்போதுதான் எனக்கும் அவருக்கும் திருமணம் நடைபெற்றது என்றும் சொன்னால் சரி. 3–வது எதிர்மனுதாரர் எனது கணவரின் சகோதரர், 4–வது எதிர்மனுதாரர் 3–ஆம் எதிர்மனுதாரரின் மனைவியாவார். 3,4 எதிர்மனுதாரர்கள் சென்னையில் தனி குடுத்தனம் செய்து வருகிறார்கள் என்றால் சரி.

திருமணத்திற்கு பிறகு என்னையும், வெளிநாடு அழைத்து சென்றுவிட வேண்டும் என்று சொல்லி, திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர், வெளிநாடு செல்ல வேண்டி, நான் ஏற்பாடுகள் செய்தேன். அந்த சமயத்தில் நான் கருவுற்றிருந்தேன் என்பதால், பிரசவத்திற்கு பிறகு வெளிநாடு செல்லலாம் என்று, இங்கேயே இருந்துவிட்டேன் என்றால் சரி. எனது கணவர் வெளிநாடு செல்லும்போது, நான் கருவுற்றிருந்ததால் என்னை எனது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரி. எனக்கு நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது. நான் மருத்துவமனையில் 8 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். அவ்வாறு நான் மருத்துவமனையில் இருந்தபோது எனது பெற்றோரும், எனது மாமியாரும் என்னை பார்த்துக் கொண்டார்கள் என்றால் சரி.

எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததால், அவரது ICICI வங்கி ATM Card–ஐ என்னிடம் கொடுத்துவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. எனது கணவர் எனது சகோதரர் அருள்செல்வத்தின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதை, நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரி. ஆனால், அது குழுவிற்கு கட்ட வேண்டிய பணம் ஆகும். இவ்வழக்கிற்கு முன்பு, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரி. அதற்கு எனது கணவர் பதிலறிவிப்பு கொடுத்துள்ளார். அதில் மேற்படி வங்கி மூலமாக பணம் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கில், நான் மேற்படி எனது கணவர் எனது சகோதரர் அருள்செல்வத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பிய பணமானது குழுவிற்கு கட்ட வேண்டிய பணம் என்று சொல்லவில்லை என்றால் சரி.

நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னர், பஞ்சாயத்து பேசப்பட்டு, பட்டுக்கோட்டையில் உள்ள எனது கணவரின் உறவினர் வீட்டிற்கு சென்று 5 நாட்கள் இருந்தோம் என்றால் சரி. அதற்கு பிறகு, எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று, பொருட்களை எடுத்து வருவதாக சொல்லிவிட்டு சென்ற நான், மீண்டும் எனது கணவர் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரி. எனது கணவர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், நான் தான் எனது பெற்றோரின் துர்போதனை காரணமாக அவருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றும் சொன்னால் , எனக்கு அவருடன் வாழ விருப்பமில்லை. எனது சொந்தகாரர்களுக்காக, பழிவாங்க வேண்டி சென்னையில் வசித்து வரும் எனது கணவரின் தம்பி, அவரது மனைவி, எனது கணவரின் தாயார் ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல.

தற்போதும் எனது கணவர் வெளிநாட்டில் உள்ளார் என்பதை தெரிந்து கொண்டு, அவரது முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்படாமல் உள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியார், புற்றுநோயாளி என்றால் சரி. அதை தெரிந்தும், நான் அவரை நீதிமன்றத்திற்கு அலைக்கழிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ள நிலையில், என்னுடைய தவறுகளை மறைப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனக்கு குடும்ப வன்முறை எதுவும்

இழைக்கப்படவில்லை என்றும், அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 27.01.2026)**
**Vedaranyam(F.A.C.)**